சுருக்கம்

பொதுப்பணிகள் – தமிழ்நாடு ஊரக வளர்ச்சிப் பணி – ஊரக வளர்ச்சித் துறையில் சார்பணி பிரிவில் வட்டார வளர்ச்சி அலுவலர்களாகப் பணியாற்றும் அலுவலர்களில் தகுதியுடைய வட்டார வளர்ச்சி அலுவலர்களைப் பணிமாற்று முறை மூலம் மாநில தொகுப்பு பணியாளர் பிரிவில் உதவி இயக்குநர் நிலையில் பணி நியமனம் (Appointment by Recruitment by Transfer) செய்ய 2008–09ஆம் ஆண்டிற்கான தற்காலிக கூடுதல் பெயர்ப் பட்டியல் (temporary list) தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணி பொது விதிகள் 4(a)–இன் கீழ் ஒப்புதல் அளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ1)துறை

அரசாணை (4டி) எண். 1 நாள் 12.1.2009

படிக்க:

1. அரசாணை (டி) எண்.826, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி(இ1) துறை, நாள் 12.11.08.
2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் கடித எண்.19636/08/ஜிஇ2.1, நாள் 10.11.08, 9.12.08 மற்றும் 23.12.08

–––––––

ஆணை:

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் 2008–09ஆம் ஆண்டிற்கு பணிமாற்று முறை மூலமான நியமனத்திற்கான உதவி இயக்குநர் நிலை பதவியில் ஏற்பட்ட கூடுதல் காலியிடங்கள் 22 என மதிப்பீடு செய்து ஒப்புதல் அளிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் நிலை பதவிக்கான தற்காலிக கூடுதல் பெயர்ப் பட்டியல் தயாரிக்க, பணி மூப்பின் அடிப்படையில் வட்டார வளர்ச்சி அலுவலர் பெயர்ப் பட்டியலை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் தனது பரிந்துரையுடன் அரசுக்கு அனுப்பியுள்ளார்.

2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் செயற்குறிப்பினை அரசு கவனமாக ஆய்வு செய்ததில் இதற்கு முந்தைய ஆண்டுகளுக்கு வெளியிடப்பட்ட பட்டியல்கள் சில தற்காலிக தேர்ந்தோர் பெயர்ப் பட்டியலாக (temporary list) வெளியிடப்பட்டுள்ளதால், 2008–09ஆம் ஆண்டுக்குரிய கூடுதல் பெயர்ப் பட்டியலையும் முறையான பெயர்ப் பட்டியலுக்குப் பதிலாக தற்காலிக பெயர்ப் பட்டியலாக (Temporary List) வெளியிட அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி உதவி இயக்குநராக ஊரக வளர்ச்சி பணியில், பணிமாற்று முறை மூலம், நியமனம் செய்ய 2008–09ஆம் ஆண்டிற்கான 22 தகுதியுள்ள வட்டார வளர்ச்சி அலுவலர்களின் தற்காலிக கூடுதல் பெயர்ப் பட்டியலுக்கு கீழ்கண்ட வரிசைப்படி தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப்பணி பொது விதி 4(a)-ன் கீழ் அரசு ஒப்புதல் வழங்குகிறது.

| வரிசை எண். | பணி மூப்பு எண் | பெயர்கள் திருமதி/திருவாளர்கள் |
|---|---|---|
| 1. | **3272** | ஜி.இளங்கோ |
| 2. | **3278** | பி.செல்வராஜு |
| 3. | **3279** | கே.பாப்பாத்தி |
| 4. | **3281** | என்.சிவக்குமார் |
| 5. | **3282** | எஸ்.ஷாஜஹான் |
| 6. | **3283** | கே.எஸ்.சங்கரையா |
| 7. | **3286** | டி.ராஜமாணிக்கம் |
| 8. | **3287** | பி.அசோகன் |
| 9. | **3288** | எ.அலமேலு |
| 10. | **3290** | கே.சிவராஜா |
| 11. | **3295** | எ.அப்துல் அஹது |
| 12. | **3300** | எ.தோதுரை |
| 13. | **3302** | எஸ்.சுவாமிதாஸ் |
| 14. | **3304** | ஆர்.சவுரிராஜன் |
| 15. | **3309** | பி.லிங்கன் |
| 16. | **3310** | எ.நடராஜன் |
| 17. | **3314** | கே.பட்டாபிராமன் |
| 18. | **3315** | எஸ்.ஆதிமூலம் |
| 19. | **3316** | பி.சீதாலட்சுமி |
| 20. | **3320** | ஆர்.செல்லையன் |
| 21. | **3321** | ஜி.தட்சிணாமூர்த்தி |
| 22. | **3322** | ஆர். தனபாலன் |

**3.** மேலே பத்தி 2–ல் வரிசை எண்.1, 6, 9, 10, 12, 13, 15, 19, 20 மற்றும் 22ல் உள்ளவர்கள் ஊரக வளர்ச்சி பணி சிறப்பு விதிகளில், விதி 3க்கு அரசாணை (நிலை) எண்.94 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி(இ1) துறை, நாள் 6.6.08ல் வெளியிடப்பட்ட திருத்தங்களின்படி பணி தகுதி பெற்றிருக்கவில்லையாதலால் உதவி இயக்குநர் தற்காலிக கூடுதல் பெயர்ப் பட்டியலில் அவர்கள் பெயரை சேர்க்க ஏதுவாக அவர்கள் சார்பாக 1969ம் ஆண்டு தமிழ்நாடு பணிகள் கையேடு தொகுதி II பிரிவு 39ல் அடங்கியுள்ள தமிழ்நாடு ஊரக வளர்ச்சி பணி சிறப்பு விதிகளில் பத்தி 3ஐ தளர்த்தி தமிழக ஆளுநர் அவர்களால் ஆணையிடப்படுகிறது.

**4.** மேற்குறிப்பிட்ட 2008–09ஆம் ஆண்டிற்கான ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் நிலை அலுவலர் பதவிக்கான தகுதி வாய்ந்த வட்டார வளர்ச்சி அலுவலர்களின் தற்காலிக கூடுதல் பெயர்ப் பட்டியல் உரிய விதிகளின்படி துறை பதவி உயர்வு குழுவின் (Departmental Promotion Committee) பரிசீலனைக்கு வைத்து ஒப்புதல் பெற்ற பின்னர் முறையான பெயர்ப் பட்டியல் (Regular Panel ) வெளியிடப்படும் எனவும் அரசு ஆணையிடுகிறது.

5. முறையான பட்டியல் வரும்வரை இப்பட்டியலில் உள்ளோர்கள் வரிசைப்படி முற்றிலும் தற்காலிக அடிப்படையில் தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப்பணி பொதுவிதிகளின் விதி 10(a)(1)–ன்கீழ் பணி நியமனம் செய்யப்படுவர். ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் ஆணையர் இதற்கு முன்னர் வெளியிடப்பட்ட உதவி இயக்குநருக்கான அனைத்து தற்காலிக பட்டியல்களையும் தேர்வாணையத்துடன் கலந்து முறையான பட்டியல் தயார் செய்ய உடன் நடவடிக்கை எடுத்து உரிய செயற்குறிப்பினை அரசுக்கு உடனடியாக அனுப்ப வேண்டுமெனவும், தேர்ந்தோர் பெயர்ப் பட்டியலில் இடம்பெற்றுள்ள நபர்களுக்கு எதிராக தமிழ்நாடு குடிமை பணிகள் (ஒழுங்கு (ம) மேல்முறையீடு) விதிகளின் விதி 17(பி)ன்கீழ்/குற்றவியல்/விழிப்புப்பணி/ஒழுங்கு நடவடிக்கை ஆணையரால் ஏற்படுத்தப்பட்ட எவ்வித ஒழுங்கு நடவடிக்கையும் நிலுவையில் இல்லையெனவும், அவர்களுக்கு எதிரான குறைக்குறிப்புரைகள் (adverse remarks) ஏதுமில்லை என்பதையும் உறுதி செய்த பின்னர் பதவி உயர்வு அளிக்க செயற்குறிப்புகள் அனுப்பவேண்டுமெனவும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணையில் கண்ட தற்காலிக கூடுதல் பெயர்ப் பட்டியலை தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலை பணி விதிகள் பொதுவிதி 4(a)இல் குறிப்பிட்டவாறு சம்ந்தப்பட்ட அனைவருக்கும் அனுப்பிவைக்குமாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. அஷோக் வர்தன் ஷெட்டி
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை–15
சம்பந்தப்பட்ட அலுவலர்கள்
<u>வழி</u> ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை–15
செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை–2
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்(சென்னை நீங்கலாக)/
சம்பந்தப்பட்ட கரூவூல அலுவலர்கள்
<u>நகல்</u>
பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை, சென்னை –9
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி அமைச்சரின் நேர்முக
உதவியாளர், சென்னை–9
செயலாளரின் தனிச் செயலர், ஊ.வ.(ம)ஊ.துறை, சென்னை–9
இருப்புக் கோப்பு/உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

**<u>சுருக்கம்</u>**

பணியமைப்பு – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – ஊரக வளர்ச்சி இணை இயக்குநர் நிலைப் பணியிடங்கள் – 2009–10ஆம் ஆண்டுக்கான காலியிட மதிப்பீடு – ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்(இ1) துறை

அரசாணை (டி) எண்.258 நாள் 15.5.2009

<u>படிக்க:-</u>

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் கடிதம் எண்.16811/ 2009/ஜிஇ1.1, நாள் 31.3.2009.

------

ஆணை:

தமிழ்நாடு ஊரக வளர்ச்சிப் பணிகளின் கீழுள்ள ஊரக வளர்ச்சி இணை இயக்குநர் நிலைப் பதவிக்கான 2009–10ஆம் ஆண்டுக்கான காலியிட மதிப்பீடு 17 (பதினேழு மட்டும்) என பணியாளர் குழுவின் ஒப்புதலுடன் ஏற்பளிக்கப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.அஷோக் வர்தன் ஷெட்டி,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை –15
<u>நகல்</u>
பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை/
நிதித் துறை, சென்னை–9
இருப்புக் கோப்பு/உதிரிகள்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

சுருக்கம்

பொதுப்பணிகள்–தமிழ்நாடு ஊரக வளர்ச்சிப் பணி–ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் உதவி இயக்குநர்/மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர்(வ)ஆகப் பணியாற்றும் தகுதியுடைய அலுவலர்களை பதவி உயர்வில் (by promotion) ஊரக வளர்ச்சி இணை இயக்குநர்களாக நியமனம் செய்ய 2009–10ஆம் ஆண்டிற்கான தற்காலிகத் தேர்ந்தோர் பெயர்ப் பட்டியல் வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி(இ1) துறை

அரசாணை(4ப)எண்.2 நாள் 08 .06.2009

படிக்க:

1. அரசாணை(ப)எண்.258, ஊரக வளர்ச்சி(ம)ஊராட்சி(இ1) துறை, நாள் 15.5.09.
2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் கடித எண்.30903/09/ஜி.இ.1.1, நாள் 31.5.09.

------

ஆணை:

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் 2009–10ஆம் ஆண்டிற்கான ஊரக வளர்ச்சி இணை இயக்குநர் நிலை பதவிக்கான காலியிட மதிப்பீடு 17 என ஒப்புதல் அளிக்கப்பட்டது. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் காலியாக உள்ள ஊரக வளர்ச்சி இணை இயக்குநர் பதவிக்கான பணியிடங்களை நிரப்ப ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசுக்கு கருத்துருவினை அனுப்பியுள்ளார்.

2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் அனுப்பிய கருத்துருவினை அரசு கவனமாக பரிசீலனை செய்து, 17 ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர்/மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர்(வ) ஆகியோரை தகுதியின் அடிப்படையில் கீழ்க்காணும் வரிசைப்படி தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிவிதிகளில் விதி 39(a)(1)ன்கீழ் ஊரக வளர்ச்சி இணை இயக்குநராக பதவி உயர்வு அளிக்க தற்காலிகத் தேர்ந்தோர் பெயர்ப் பட்டியலுக்கு ஒப்புதல் அளித்து அரசு ஆணையிடுகிறது.

| வ.எண் | பெயர் (திருமதி/திருவாளர்கள்) |
|---|---|
| 1. | ஏ.தங்கவேலு |
| 2. | எம்.பிச்சைக்கண்ணு |
| 3. | ஜெ.இராமமூர்த்தி |
| 4. | வி.சிதம்பரம் |
| 5. | எம்.செல்வராஜ் |
| 6. | ஹெச்.சந்திரசேகரன் |
| 7. | எம்.சீனிப்பீர் |
| 8. | என்.அமானுல்லா |
| 9. | கே.செல்லையா |
| 10. | என்.பிரேமா |
| 11. | ஏ.மகாதேவன் பிள்ளை |
| 12. | எஸ்.ஜனகவல்லி |
| 13. | பி.சீத்தாலட்சுமி |
| 14. | ஜி.பிரபாகர் |
| 15. | எம்.சந்தோஷ் குமார் |
| 16. | ஆர்.சுந்தர ராஜு |
| 17. | வி.திருவரங்கம் |

3. மேலே பத்தி இரண்டில் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலர்கள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் இணை இயக்குநர்களாக பதவி உயர்வு பெற முழுத் தகுதிகளையும் பெற்றுள்ளார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.அஷோக் வர்தன் ஷெட்டி,
அரசு முதன்மைச் செயலர்.

பெறுநர்
சம்பந்தப்பட்ட அலுவலர்கள்
வழி—ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை—15
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை—15
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர்(பயிற்சி), சென்னை—15
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை—18/35/6
சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
சம்பந்தப்பட்ட மாவட்ட கருவூல அலுவலர்கள்.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை—9/35/79.
நகல்
பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, சென்னை—9
அரசுச் செயலாளரின் தனிச் செயலர், ஊ.வ.(ம)ஊ.துறை, சென்னை—9
துணை முதலமைச்சர் அலுவலகம், சென்னை—9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

**ABSTRACT**

Public Services – Rural Development and Panchayat Raj Department – Tamil Nadu Panchayat Development Service Post of Assistant Director of Rural Develpment/Personal Assistant (Development) to the Collector – Recruitment by transfer and direct recruitment – Estimate of Vacancies for the year 2009-2010 – Orders Issued.

---

Rural Development and Panchayat Raj(E1)Department

G.O.(D)No.480 Dated 5.8.2009

Read:-

1. From the Secretary, Tamilnadu Public Service Commission letter No.429/DPD.B2/2009, dated 2.3.09.
2. From the Commissioner of Rural Development and Panchayat Raj letter No.14900/2009/GE 2.1, dated 16.7.2009.

---------

ORDER:

The Government have examined the proposal of the Commissioner of Rural Development and Panchayat Raj and based on the recommendation of the Staff Committee, fix the estimate of vacancies for the post of Assistant Director of Rural Development/Personal Assistant(Development) to the Collector in Tamil Nadu Panchayat Development Service for the year 2009-2010 as follows:-

| | | |
|---|---|---|
| By recruitment by transfer | - | 156 |
| By direct recruitment | - | 17 |
| Total | - | **173** |

(By order of the Governor)

Niranjan Mardi
Secretary to Government (i/c)

To
The Commissioner of Rural Development and Panchayat Raj, Chennai-15.
Copy to
The Personnel and Administrative Reforms/Finance Departments, Chennai -9.
The Secretary, Tamilnadu Public Service Commission, Chennai-2.

//Forwarded by Order//

Section officer.